DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 450/2009

Deposition of witness for: PW - 8

Name : பாலாஜி Father/Husband Name: ராஜசேகரன்

Village : Taluk :

Calling : Age :

Date : 23.06.2025

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.06.2025.

**( சாட்சி சத்திய்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது )**

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் மதுரை மாவட்டம் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து கடந்த 2022ம் ஆண்டு கட்டாய ஓய்வு பெற்று மதுரையில் குடியிருந்து வருகிறேன்.

22.07.2009ம் தேதி மதுரை மாவட்டம் மேலூர் வட்ட ஆய்வாளராக பணிபுரிந்தபோது நிலைய குற்ற எண் 516/09 வழக்கினை எனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு வழக்கின் சம்பவ இட சாட்சிகளான அப்துலு ரகீம், அக்பர், ரோஜாபீவி, ஆகியேர்களை விசாரித்து தனிதனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகள் ஆண்டிச்சாமி, சுரேஷ் முன்னிலையில் சம்பவ இடம் சென்று காலை 09.30 மணிக்கு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். ( **அந்த பார்வை மகஜர் மற்றும் வரைபடம் முறையோ அசாஆ 8 மற்றும் அசாஆ 9 ஆக குறியீடு செய்யப்டுகிறது** ). பின்னர் எனக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி 13.00 மணிக்கு மேலூர் செக்போஸ்டில் ரோந்து செய்து வந்தபோது பஸ் ஸ்டாப்பில் நின்றுகொண்டிருந்த பின்னர் பெயர், விலாசம் கேட்டு தெரிந்துகொண்ட

பாண்டி என்ற ரமேஷ்பாண்டி எங்களை பார்த்து ஓடி முயன்றவரை மறைத்து பிடித்து வழக்கின் குற்ற சம்பவமான மாடு களவாடியதை ஒப்புக்கொண்டு தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை ரவிசந்திரன், அய்யனன் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். ( **அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது** ). அதன் அடிப்படையில் அதே சாட்சிகள் முன்னிலையில் 16.15 மணிக்கு மேலூர் அண்ணாகாலனியில் மாவிலி மகன் உலகநாதன் வீட்டு முன் கட்டியிருந்து ஒரு கிடரி கன்று ( ரிட்டன் ஷெர்சி வகை ) அடையாளம் காட்ட அதே சாட்சி முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். 14.45 மணிக்கு பர்மா காலனி எதிரி ரமேஷ் என்ற ரமேஷ் பாண்டியின் தம்பி வீட்டருகில் வயல் அருகே உள்ள முள் செடியில் கட்டி போட்டு கிடந்த ரிட்டன் ஷெர்சி கிடரி கன்று ஒன்று, ரிட்டன் ஷெர்சி கருப்பு கிடரி கன்று மூன்று, நாட்டு மயிலை காளைக்கன்று ஒன்று, இரு சாதி நாட்டு பசு மாட்டு கன்று ஒன்று மொத்தம் ஏழு, அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி மூலம் கைப்பற்றி சாட்சி அய்யனன் கையொப்பம் செய்துள்ளார், அந்த கையொப்பம் அசாஆ 4 மற்றும் 5 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. ( **அந்த அத்தாட்சிகள் முறையே அசாஆ 11 மற்றும் அசாஆ 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது** ). சாட்சிகள் உலகநாதன் உலகு ரவிச்சந்திரன் அய்யனன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமுலம் பதிவு செய்தேன். எதிரி மற்றும் கைப்பற்றிய சொத்துக்களுடன் நிலையம் வந்து தக்க வழிக்காவலுடன் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். வழக்கு சொத்துக்களை படிவம் 95 மூலம் நீதிமன்ற வசம் ஒப்படைத்தேன். ( **அந்த படிவம் 95 அசாஆ 13 ஆக குறியீடு செய்யப்படுகிறது** ). **வழக்கு சொத்துக்களான அடையாளம் காட்டக்கூடிய புகைப்பட நகல் ஒன்று**

**அசாஆ 14 ஆக குறீயிடு செய்யப்படுகிறது** ). முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சார்பு ஆய்வாளர் கிருஷ்ணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் எனது புலன்விசாரணை முடித்து எதிரி மீது 31.08.2009 ம் தேதியன்று பிரிவு 379 இதச ஆக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

( **எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்யவில்லை. இத்துடன் குறுக்குவிசாரணை முடித்து வைக்கப்படுகிறது** ).